[23rd March 1963

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், இப்போது ஏற்படுத்தப் போகிற கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளையெல்லாம் முக்கிய தலைநகரங்களில் 4 இடங்களில் ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. தாலூக்காக்களில் இருக்கும் பொற்கொல்லர்களுக்கும் ஏதாவது வழி வகை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் சொன்னேன். வேறு தொழில் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட்டின் கீழ் உதவி கொடுக்கப்படும்.

திரு. எஸ். மாதவன் : இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்றட்டிட்யூட்டில் ஷார்ட் கோர்ஸ் கொடுத்து வேலை பார்க்க விரும்புகிறவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதத் திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கிறது. என்ன ட்ரெயினிங் என்பதெல்லாம் இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேருகின்ற பொற்கொல்லர்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய பங்குத் தொகையைச் சர்க்கார் கடனாகக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஓரளவு கடனாகக் கொடுக்கும்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, பொற்கொல்லர்களுக்கு வேறு தொழில் செய்வதற்கு உதவியாக 500 ரூபாய், 1,000 ரூபாய் அளிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்கள். எந்தத் தொழிலைச் செய்தாலும், கடை வைத்தாலும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜில்லாக்களில் இருக்கிற அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸைப் போய்ப் பார்த்தால் இந்த விவரங்களையெல்லாம் அவர்கள் சொல்லுவார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார். பொற்கொல்லர் திருச்சியில் இறந்தார் என்பது பற்றி, திருச்சி பெரிய கடை . . .

கனம் சபாநாயகர் : (மணியடித்து) அடுத்த கேள்வி. கேள்வி 357-இ.

Overbridge on the Thirupparankundram Road

* 357-E Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to State :

(*a*) whether overbridges are proposed to be built at the Railway level crossings near the Power House and the Meenakshi Mills Gate on the Thirupparankundram Road, Madurai ; and

23rd March 1963]

(*b*) if so, when the works are expected to commence?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Consideration of proposals for the construction of overbridges at the existing level crossings at mile 300/2 of National Highways 7 on Tirupparankundram Road near Subramaniyapuram and at mile 300/7 of National Highways 7 on Tirupparankundram Road near Meenakshi Mills at Madurai, besides certain other similar schemes within Municipal limits outside Madras City has been deferred in view of the National Emergency.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, இந்த மேம்பாலமும், அடுத்து திண்டுக்கல் ரோடுக்குப் போகிற வழியில் அங்கு ஒரு மேம்பாலமும் அமைக்கவேண்டுமென்று சில ஆண்டு களுக்கு முன்பே எஸ்டிமேட் தயார் செய்து, சாங்ஷன் ஆயிற்று. இருந்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் என்னுடைய பதிலில் பின் பாகத்தைப் படிக்கிறேன். " இது போன்ற இன்னும் சில திட்டங் களும் தேசிய நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன ".

விற்பனைப் பொருள்கள் வரிவிதிப்பு

*357-F கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதி லளிப்பாரா—

விற்பனைப் பொருள்கள் வரி விதிப்புபற்றி ஆராய்ந்து யோசனை கள் கூற அரசு நிபுணர் யாரையாவது நியமனம் செய்ய உத்தேசித் திருக்கிறதா ?

THE HON. SRI. R. VENKATARAMAN : In view of the emergency, the Government have deferred for the present the proposal for appointment of an expert to review the working of the Madras General Sales Tax Act, 1959.

திரு. எஸ். முருகையன் : ஸார், உணவுப் பொருட்களையாவது இந்த வரி விதிப்பிலிருந்து நீக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வருகிற 28-ம் தேதி இந்த மானியக் கோரிக்கை வரும்போது, இதைப் பற்றிப் பேசலாம் ; அப்பொழுது பதிலளிக்க முடியும்.

நில உச்சவரம்புச் சட்டம்

*357-G கேள்வி.—**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நில உச்சவரம்புச் சட்டத்தை அமல் படுத்தல் சம்பந்தமாக இதுவரை எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, was first published in the *Fort St. George Gazette* on 2nd May 1962. The rules necessary